
# தமிழ்முரசு



# தமிழ் முரசு

(மாதமொரு புத்தகம்)

## சந்தா விவரம்

தொடர்ந்து வெளி வரும் 12 புத்தகங்களுக்கு

| | |
|---|---|
| உள் நாடு | ரூ. 3—0—0 |
| வெளி நாடு | ரூ. 3—12—0 |

## தனிப் பிரதி

| | |
|---|---|
| உள் நாடு | ரூ. 0—4—0 |
| வெளி நாடு | ரூ. 0—5—0 |

## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| அட்டையின் மேல் பக்கத்திற்கு | ரூ. 75 |
| அட்டையின் உள் பக்கத்திற்கு | ரூ. 50 |
| ஒரு பக்கத்திற்கு | ரூ. 30 |
| அரை பக்கத்திற்கு | ரூ 15 |

மற்ற விவரங்களை மேலாளருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்

தமிழ் முரசு பதிப்பகம்
233, லிங்கி செட்டி தெரு,
சென்னை 1.

# தமிழ்முரசு

இரண்டாவது புத்தகம்

பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞான கிராமணியார்

விலை நான்கணா

வெளிநாடு ஐந்தணா

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை—1.

1946-ம் வருடம் ஜூன் மாதம்
உரிமை பதிவு செய்யப்பட்டது.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| முரசொலி | .... | நாமக்கல்-கவிஞர் | 3 |
| பேர் தெரியாப் பெருவீரர் | .... | ரா.பி. சேதுப்பிள்ளை | 5 |
| எது வேண்டும்? | .... | போ. குருசாமி | 8 |
| என் ஆசை | .... | தெ. பொ. மீ. | 16 |
| புதிய தமிழகம் | .... | இளவழகனார் | 18 |
| தமிழருக்கும் சுயநிர்ணயம் | .... | ம. பொ. சி. | 23 |
| புதுமைத் தமிழ் | .... | மு. அருணாசலம் | 37 |
| பொல்லாத உலகம் | .... | "பாமரன்" | 47 |


---

## அறிக்கை

'தமிழ் முரசு' முதற் புத்தகம் வேண்டுமென்று நண்பர்களும், விற்பனையாளர்களும் எழுதியவண்ண மிருக்கின்றனர். முதற் புத்தகம் முழுவதும் செலவழிந்து விட்டதால் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

—தமிழ் முரசு பதிப்பகத்தார்.

# முரசொலி

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

முரசுகொட்டி தமிழ்முழங்க முன்னணிக்குச் செல்லுவோம்
அரசுபற்றி உலகனைத்தும் அன்புகொண்டு வெல்லுவோம்
பரிசுபெற்ற இளைஞரென்ன பாய்ந்து நான்கு எல்லையும்
வரிசைமிக்க புதுமைவாழ்வை வானொலிக்கச் சொல்லுவோம்.

(முரசு)

அறமறிந்து பொருள் வளர்த்து அதிலடைந்த இன்பமே
முறைதெரிந்த வாழ்க்கையென்ற முடிவறிந்து நம்பினோர்
இறைவனென்ற ஒன்றையன்றி எதையுமென்றும் கும்பிடா
திறமிருந்த தமிழர்இன்று திடமிழந்து வெம்பினோம். (முரசு)

நானிலத்தில் இணையிலாத நாகரீகம் உற்றவர்
வானகத்தின் இன்பம் யாவும் வையகத்தில் பெற்றவர்
ஞானமென்ன பொதுநலத்தை நாளும் போற்றக் கற்றவர்
மானமிக்க தமிழரென்ற மாண்மைமீண்டும் பற்றுவோம்.

(முரசு)

கோலமறுத்து பொய்வெறுத்த குணமிருந்து கூறினோர்
தலைசிறக்க தரணிதன்னில் தமிழரன்றி வேறுயார்?
நிலைகுலைந்து அரசிழந்த நிந்தைமுற்றும் மாறவே
கலகலத்து முரசுகொட்டி கடனுரைத்து தேறுவோம்.

(முரசு)

வீரம்என்ற பலவும்ஆற்றி வேணவெற்றி கண்டவர்
தீரம்மிக்க பணிகள்செய்து த்யாகபுத்தி கொண்டவர்
ஈரம்மிக்க கருணைவாழ்வை என்றும்போற்றும் தொண்டர்நாம்
சாரம்அற்ற கதைகள்பேசி சஞ்சலங்கள் மண்டினோம். (முரசு)

உலகமெங்கும் மக்கள்யாரும் ஒருகுடும்பம் என்னவே
குலவிவாழும் கொள்கைதன்னை கொண்டுபண்டு சொன்னவர்
கலைமலிந்த வாழ்க்கைமுற்றும் கடவுள்உண்மை தன்னையே
விலைகடந்த செல்வமென்ற தமிழர்மேன்மை உன்னுவோம்.
(முரசு)

தமிழர்நாட்டை தமிழர்ஆண்டு தமிழ்குணத்தைக் காப்பதே
அமுதமூறும் அன்பின்வாழ்க்கை அகிலமெங்கும் பூப்பதாம்
நமதுபண்பு உலகின்மற்ற நாட்டினர்க்கு வாய்ப்பதே
சமதையாக மக்கள்தம்மில் சண்டைநீக்கிச் சேர்ப்பதாம்.
(முரசு)

முட்டிஎட்டு திக்கும்எங்கள் முரசொலிக்கக் கொட்டுவோம்
வட்டமிட்ட வறுமைதந்த மடமைபோக்கிக் கட்டுவோம்
விட்டுவிட்ட தமிழுணர்ச்சி வீறுகொள்ளத் தட்டுவோம்
அட்டியின்றி தமிழறங்கள் ஆட்சிகொள்ளும் மட்டிலும்.
(முரசு)

ஆழம்மிக்க அறிவறிந்து அறமிகுந்த தமிழகம்
ஊழைவென்ற உத்தமர்க்கு உறையுளான தமிழகம்
வாழிஎங்கள் கலைசிறந்த பண்புமுற்றும் வாழ்கவே
வாழிஇந்த உலகம் முற்றும் வம்பிலாது வாழ்கவே. (முரசு)

# பேர் தெரியாப் பெரு வீரர்

ரா. பி. சேதுப பிள்ளை

தன்னரசு வீற்றிருந்த தமிழ் நாட்டில் வீரத் திருமகள் வீறுற்று விளங்கினாள். போர்க் களத்தில் வீரம் விளைத்துப் புகழ் பெற்ற தமிழர் எண்ணிறந்தவர். பாலாற்றங் கரையிலே பல முறை போர் நடந்தது. செருக்களத்திற் பெருகிய செந்நீர் பாலாற்றில் சுரந்த தெண்ணீரோடு கலந்தது. ஒருகால் அங்கு நிகழ்ந்த போரில் அருந்திறல் காட்டி வெற்றி பெற்றான் ஒரு வீரன். அவனைப் "பாலாற்று வென்றான்" என்று தமிழகம் பாராட்டிற்று.

அவ்வண்ணமே செய்யாற்றங்கரையில் நடந்த போரில் பகைவரை மடக்கி யடித்து வாகை மாலை சூடினான் ஒரு தலைவன். அவனைச் "செய்யாற்று வென்றான்" என்று சீராட்டினர் தமிழ் நாட்டார். தொண்டை நாட்டில் அவ்விருதுப் பெயர் கொண்டு பல ஊர்கள் தோன்றி யுள்ளன.

பாண்டி நாட்டில் மறவர் புகழ் பெற்று விளங்கினர். மறவர் என்பவர் வீரர்; மனத்திண்மை வாய்ந்தவர். இத் தகைய மறவன் ஒருவன் போர்க்களம் புகுந்தான். முன்னணியில் நின்று கடும் போர் புரிந்து மாற்றார் பலரை மாய்த்தான். அப்போது பகைவர் சரமாரி பொழிந்தார்கள். அன்னார் விடுத்த அம்புகளை மலை போன்ற மார்பிலே தாங்கி நிலை குலையாமல் நின்றான் அவ்வீரன். அப்பேராண்மையைக் கண்டு வியந்தனர் வீரரெல்லாம் அன்று முதல் சரந்தாங்கி என்னும் விருதுப் பெயர் அவ்வீரனுக்கு வழங்கலாயிற்று. அப்பெயரும் ஊர்ப் பெயராய் அமைந்தது. இன்

றும் இராமநாதபுரம் என்னும் மறவர் நாட்டில், நிலக் கோட்டை வட்டத்தில் சரந்தாங்கி என்ற ஊர் நின்று நிலவு கின்றது.

மறவர் இனத்தைச் சேர்ந்த மற்றொரு வீரன் மாற்றார் விடுத்த சாங்களைத் தன் நெடுங்கரத்தாற் பற்றி முறித்து வீசினான். பகைவரும் அச்செயலைப் பாராட்டினர். "கணை முறித்தான்" என்று வீரருலகம் அவனை வியந்து புகழ்ந் தது. அவன் பெயரால் எழுந்த ஊர் மறவர் நாட்டு அறுப் புக் கோட்டை வட்டத்தில் இன்றும் காணப்படுகின்றது. இன்னும், மானங்காத்தான், எப்போதும் வென்றான், பய மறியான், முதலிய விருதுப் பெயர்கள் பாண்டி நாட்டில் ஊர்ப் பெயர்களாக வழங்குகின்றன. இவ்வீரம் விளைத்த வர் இன்னார் என்பது விளங்கவில்லை. அவர் ஊரும் பேரும் துலங்கவில்லை. குலமும் குடியும் தெரியவில்லை. ஆயினும் அன்னார் காட்டிய வீரம் நம் நாட்டு ஊர்ப் பெயர்களில் விளங்குகின்றது. வீரக்கல் ஒருகால் அழியலாம். உருவச் சிலை ஒடிந்து வீழலாம். மற்றைய நினைவுச் சின்னங்கள் மறைந்து ஒழியலாம். ஆனால் ஊர்ப் பெயர்களில் வாழும் இவ்வீரர் பெருமைக்கு எந்நாளும் அழிவில்லை.

இத்தகைய மறவர் குலம் இன்று பதங்குலைந்து பாழாய்க் கிடக்கின்றது. அன்று வில்லெடுத்த கைகள் இன்று புல்லறுக்கின்றன; அன்று வாளோச்சிய கரங்கள் இன்று கூழேந்திக் குடிக்கின்றன

"மண்வெட்டிக் கூலி தின்ன லாச்சே—எங்கள்
வாள்வலியும் வேல்வலியும் போச்சே!

விண்முட்டிச் சென்ற புகழ் போச்சே—இந்த
மேதினியில் கெட்டபெயர் ஆச்சே"

என்று வருந்தும் நிலை மறவனுக்கு வந்து விட்டது.

இவ்வாறு தமிழ் நாட்டுப் பேராண்மை ஒளி மழுங்கிய பொழுது ஊர்ப் பெயர்களும் உலைவுற்றன. வேலூர் வட்டத்தில் விளங்கிய பாலாற்று வென்றான் என்ற ஊர் இன்று பாலாத்து வண்ணான் என வழங்குகின்றது. வாலாஜா வட்டத்திலுள்ள செய்யாற்று வென்றான் என்ற ஊர், செய்யாத்து வண்ணான் ஆய்விட்டது. மாற்றாரை அடித்துத் துவைத்து வென்ற வீரனை ஆடையை மடித்தடிக்கும் வண்ணானாக்கிய சிறுமை வருந்தத் தக்கதன்றோ?


டி. கே எஸ். சகோதரர்களின்

## ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா

**21**-ஆண்டுகளாக தமிழ் நாட்டில் தொண்டாற்றி வரும் கலைக் கழகம்

இன்று......

குமஸ்தாவின் பெண், ராஜா பர்த்ருஹரி, அந்தமான் கைதி, முள்ளில் ரோஜா, பில்ஹணன், ஔவையார், தேச பக்தி, சிவாஜி, மேனகா.

இனி......

இராஜராஜ சோழன், அவள் விபசாரியா, வீரப் பெண், புயல்...

### கோவை தியேட்டர் ராயலில்

10-5-46 முதல், கலை விழா நடைபெறுகிறது

# எது வேண்டும்?

போ. குருசாமி

'அது வெறுங் கதைதான்'

'வெறுங் கதையா?' சரித்திர நிகழ்ச்சியல்ல என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். வெறுங் கதை என்று சொல்ல முடியாது; நிச்சயமாக முடியாது.

கருத்துக்கள் பொதிந்த கதை; வருங்காலம் பற்றிய கனவுக் காட்சி. நம்மை நமக்கு உணர்த்தி அறிவு கொளுத்தும் பொருளுரை.

இலக்கியச் செல்வம், அரசியல் வழிகாட்டி, வாழ்வின் ஒளி—இவ்வளவும், இதற்கு மேலும் கொண்டுள்ளது சிலப்பதிகாரம் என்ற செஞ்சொல் ஓவியம். அதை வெறுங் கதை என்று ஒதுக்குவோர் அறிவுக்கு ஒதுக்கிடம் தர வேண்டியது தான்.

## 2

'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்' பினை எழுத்தாணி கொண்டு இயற்றிய நக்கீரர் மதுரையைப் புகழ நினைத்தார். திருமுருகாற்றுப் படையில் அந்நகர் வாயிலை விவரிக்கிறார்; அவ்வாயிலுக்கு அழியாமை தருகிறார். அவர் 'வாக்கில் விழுந்த' அந்நகரின் வாயிலுக்கு அழிவு ஏது?

நகரின் உட்புறத்தை விவரித்த வகை நமக்கு மிகவும் உவப்பையளிக்கும். கடைத் தெரு எப்படி இருந்தது என்று கூற வந்த இடத்தில்,

திருவீற் றிருந்த தீதுதீர் நியமம் என்று சொல்லி யிருக்கிறார். திருமகளே—செல்வத்தின் உருவகத் தேவதையே—அங்கே திருவோலக்கம் கொண்டிருக்கிறாள். வீற்றிருத்தல் என்ற அழகான சொல்லைப் பெய்து மதுரையின் பொருட் செழிப்பினைத் தெளிவாக விளக்கினார். 'தீதுதீர் நியமம்' என்று சொல்லிக் கள்ளச் சந்தையும், கொள்ளைச் சிந்தையு மற்ற நேர்மையான வாணிகச் சிறப்பினை விளக்கினார்.

இந்தச் சிறப்பை யெல்லாம் விட்டு விடுவோம். வாயிலைப் பற்றி ஓர் அழகான ஓவியம் தந்திருக்கிறார். அதை இங்கே காணலாம்.

கூடல்மா நகரின் வாயிலிலே கயல் பொறித்த நெடுங் கொடி வானளாவிப் பறக்கிறது. 'போர்! போர்!! வருக போர்!!!' என்று பகைவரை அழைக்கும் பான்மையில் அக்கொடி பறக்கிறது. போரை விரும்பி எழுந்து ஓங்கி நிற்கும் கொடி மரத்தில் சில பொருள்கள் நம் கருத்தைக் கவருகின்றன. அவை யாவை?

படையெடுத்துச் செல்லுவோர் பகைவருடைய கொடி மரத்தினைச் சிதைத்து ஒழிப்பதையே நோக்கமாகக் கொள்வர். ஒரு கொடி தாழ்ந்து சிதையுமாயின் அந்தக் கொடிக்கு உரியவர் தோற்றனர் என்பது தான் தீர்ப்பு. எனவே, கொடி மரத்தைக் காப்பதில் எவரும் கண்ணுங் கருத்துமாய் இருப்பர். கொடி மரத்தைச் சுற்றி படை காவல் புரியும்.—இது பொதுவான வழக்கம்.

ஆனால் பாண்டி நாட்டுக் கொடி மரத்தைச் சுற்றிப் படை ஒன்றும் காணோம். அதற்குப் பதிலாகக் கொடி மரத்திலே 'பந்தும் பாவையும்' கட்டித் தொங்க விட்டிருக்கிறார்கள். மேலே கயற் கொடி கரத்தினை நீட்டி நீட்டிப்

பகைவரை 'வருக வருக' என்று அழைக்கிறது. நடுவில் பந்தும் பாவையும் கட்டித் தொங்குகின்றன

எதற்கு? பாண்டியனை எதிர்த்துப் போராடப் பகைவரும் உண்டா அப்படி யாராவது 'இதோ நான் பாண்டியன் பகைவன்' என்று சொல்லி வந்தால், அவன் பாண்டி நாட்டுக் கொடி மரத்தில் காண்பன பந்தும் பாவையுமே. பந்தும் பாவை (பொம்மை)யும் மகளிர் விளையாட்டுப் பொருள்கள். பாண்டியன் கண்களுக்குப் பகைவர்கள் பெண்களாகத் தான் தோன்றுகிறார்கள். 'சீ, உங்களோடு போராடுவதா! இதோ, இவற்றை வைத்து விளையாடுங்கள்' என்று சொல்லுவது போல் பாண்டியன், 'பந்தும் பாவையும்' பகைவரை வரவேற்க ஏற்பாடு செய்திருந்தான்.

எவனாவது படை யெடுத்து வர வேண்டுமே, எவனுமே வரவில்லை. கூடல் நகரத்து வாயிலில் போரே நடக்க வில்லை. போரை விரும்பி அழைக்கும் கொடி மரத்தின் அருகில் கூடப் போர் நெருங்கவில்லை.

செருப் புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்

—இது நக்கீரர் கண்ட காட்சி. எந்தப் பாண்டியன் காலத்தில் இருந்த நக்கீரர் கண்டாரோ, அதைப் பற்றி இப்போது கவலை வேண்டாம். நமக்கு இப்போது வேண்டிய கருத்து இதுதான்: பாண்டியன் ஆட்சியில் பகைவர் இல்லை; செழிப்பு மிகுந்திருந்தது. வலிய அழைத்தாலும் போருக்கு வருவார் இல்லை; பகைவரை அழித்து வென்றவன் பாண்டியன்—இவ்வளவு தான் இங்கே நாம் காண வேண்டியது.—இது தமிழகம்.

## 3

இமய நெற்றியில் தமிழ் மூவேந்தர் தம் வில் கயல் புலிக் கொடிகளைப் பொறித்த செயல் வட நாட்டு மன்னர்க்கு எல்லையில்லாத வருத்தத்தினை விளைவிக்கும். —இது இயற்கை தான்

கனகன், விசயன் என்ற இரண்டு வட நாட்டு மன்னர்கள் ஒரு சமயம், எங்கோ வடக்கே நடந்த சுயம்வரத்தின் போது தங்கள் வெறுப்பைக் காட்டினர்.

“இமய மலையிலே தமிழ் நாட்டு இலச்சினைகளை அந் நாட்டு மன்னர்கள் பொறித்தபோது, இந்தப் பக்கத்தில் எங்களைப் போன்ற வீர தீர சூரர்கள் இருக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். ‘ஏமாளி’கள் அரசு செலுத்திய போது ஏற்றங் கொண்டதைப் பெருமையாகக் கொள்கிறார்கள், தமிழ் மன்னர்கள்!........” என்ற வகையில் அவ்விருவரும் உரையாடினர்.

சுயம்வர மண்டபத்திலே தமிழ் நாட்டு மன்னர் எவரும் இல்லை. இருந்தாலும் அந்தப் பேச்சின் விவரம் தமிழகத்தை எட்டிவிட்டது. ஐந்தாம் படை என்று ஒன்று இல்லாவிட்டால் உலகத்தில் அனேகமாய்ப் போரே இருக்க முடியாது; அரசியலில் பித்தலாட்டம் இருக்க முடியாது; குடும்ப வாழ்க்கையிலே கொந்தளிப்பு இருக்க முடியாது. எவரோ—வடக்கே இருந்து வந்தவர்கள்—சேரன் செங்குட்டுவனுக்கு இந்தச் ‘சுயம்வர வீணர்’களின் ‘வீரப் பிதற்றல்’களை அறிவித்தனர்.

தமிழர் ஆற்றல் என்ன, தமிழின் திறம் யாது, தமிழ் நாட்டு வீரம் என்றால் அது எப்படி இருக்கும்—இதெல்

லாம் பாவம், அந்தப் பேதைகள் அறியார். அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியது தான்.

என்ன துணிவும், நெஞ்சழுத்தமும் இருந்தால் என் நாட்டை—எங்கள் நாட்டை—என் தமிழை அவர்கள் பழிப்பர்!

தமிழ் என்றால் வெறும் பேச்சா? வெறும் மொழியா? வெறும் மக்கள் கூட்டமா? எல்லையற்ற பெருமையும், விண்சுருங்க விரிந்த புகழும் படைத்த ஒரு பண்பாட்டின் அறிகுறி யல்லவா தமிழ் என்பது? அதைப் பழிக்கத் துணிந்த வட நாட்டு மன்னரை அடிபணியச் செய்யாவிடில் பெரும்புகழ் மாய்ந்து உலகுள்ள அளவும் இகழ் நிலை நிற்கும்; ஆனால், தமிழாற்றலை அவர்க்கு அறிவுறுத்தாமல் இருந்தாலல்லவா எமக்கு அந்தப் பழி.

இப்படியாகச் செங்குட்டுவன் உள்ளம் கனன்று கனன்று உள்ளூர எரிந்தது. எது சந்தர்ப்பம் என்றிருந்தான்.

தனக்கு—செங்குட்டுவனாகிய தனக்கு—நெடுஞ்சேரலாதன் மகனாகிய தனக்கு வந்த பழியைத் துடைக்கவா இப்படிக் கொதித்தான்? இல்லை; இல்லை. தமிழுக்கு, தமிழ் நாட்டுக்கு, தமிழ் மன்னருக்கு, தமிழ் வீரத்துக்கு—சுருக்கமாகத் தமிழ் இனத்துக்கு வந்த—வருமென்று நினைத்த—பழியாகிய நச்சு மரத்தின் வேரிலே வெந்நீர் வார்க்கவே இப்படிக் கொதித்தான்.

அவன் சொல்வதைக் கேளுங்கள் :

"அமையா வாழ்க்கை
அரைசர் வாய்மொழி

நம்பால் ஒழிகுவது
ஆயின் ஆங் (கு) அஃது
எம்போல் வேந்தர்க்கு
இகழ்ச்சியும் தரூஉம்.

" காவா நாவின் கனகனும் விசயனும்
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றம் கொண்டுஇச் சேனை செல்வது "

பத்தினிப் படிமத்துக்குக் கல் கொண்டுவருவதைச் சாக்காக (தலைக்கீடாக)க் கொண்டு வடவர்க்குத் தென் தமிழாற்றலைத் தெரிவிக்க நினைத்தான் அத்தமிழ் வேந்தன். அவன் தமிழினத்தின் தலைவன்—அன்று மட்டுமல்ல; இன்றளவும், இனிமேல் தமிழன் நிலவுலகில் நிலவும் வரையிலும் அவன் தலைவன்தான்.

இப்படிப்பட்ட வரலாறு (வெறும் கதை !) கூறுவது நம் சிலம்புச் செல்வம். தமிழினம் பெருமைப் படத்தக்க காப்பியம் அது.

சிலப்பதிகாரம் காட்டிய இந்தக் காட்சியில் கண்டதும் தமிழகம்தான்.

4

இன்றைய 'தமிழகம்'! விவரிக்க நம்மால் முடியாது. பாரதியாராலும் முடியாது. பந்தயம் வேண்டுமானாலும் கட்டலாம். அவ்வளவு பரிதாபகரமான நிலைமையில் தமிழினம் கிடக்கிறது.

'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்', 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்றெல்லாம் பாரதியார் கதறிப் பார்த்

தார். பரிதாபத்தின் முழு எல்லையையும் அவரால் காண முடியவில்லை. கவிஞன் கற்பனையையும் கடந்துவிட்டது, நம் பரிதாப'நிலை.

நம் வாழ்வின் வகையெல்லாம்—தமிழ்நாட்டு விவகாரங்களைப் பற்றிய தீர்ப்பெல்லாம் நம் பண்பாட்டின் திறமறியாத வடநாட்டினர் கையில். அவர்கள்தான் நம்மைப் பற்றி முடிவு காணவேண்டும்.

வாணிபம் தொடங்கி, அரசியல் முடிய எல்லாத் துறைகளிலும் தமிழனுக்குச் சுய நிர்ணயம் இல்லை. சுய நிர்ணய உணர்ச்சியும் அவனுக்கு இல்லை என்று சொன்னாலும் மிகையன்று.

காங்கிரஸ் கட்சியில் ஈடுபட்டுத் தொண்டாற்றும் ஒருவர், 'தமிழினம், தமிழ் நாடு, தமிழ் மொழி என்றெல்லாம் பேசினால், 'தீவிர' தேசபக்தர்கள் அவரைக் குறுகிய நோக்கம் உடையவர் எனப் பழிக்கின்றனர். 'புரொவின்ஷியலிஸம்' என்று ஓர் அருமையான வார்த்தையை கையாளுகிறார்கள் 'ஓ' அவரா, சேச்சே, சுத்தப் புரொவின்ஷியலிஸ்ட் அல்லவா தமிழ் கிமிழ் என்றெல்லாம் பேசுகிறார்! ஜெய் ஹிந்த் என்றால் புரியாது என்கிறார்.......' என்று பேசி விட்டால் பாரத மாதாவின் பரம பக்தராகி விடலாம் என்று நினைக்கின்றனர். பேதையர் உலகம்.!

—இதுவும் தமிழ் நாடுதான்

நக்கீரர் கண்டதும் தமிழ் நாடு; இளங்கோ கண்டதும் தமிழ் நாடு; பாண்டியன் ஆண்டதும் தமிழ் நாடு; சேரன் ஆண்டதும் தமிழ் நாடு. இன்று நாம் வாழ்வதும் தமிழ் நாடு தான்.

திரும்புங்கள்; எங்கு வேண்டுமானாலும் திரும்புங்கள். கருங்'கும்'மென்ற இருள்! வடக்கே இருந்து வராதா வெளிச்சம் என்று ஏங்கித் தவிக்கும் பேதையர்! விளக்கிருக்க, திரி இருக்க, விளக்கெரிக்கப் பண்பாட்டின் நெய்யிருக்க, இருளிலே தடவித் தவிக்கிறான் இன்றைய தமிழன்.

அறிவு கொளுத்துவார் யார் ?

## 5

இறந்த காலத் தமிழகம் கண்டோம்; நிகழ் காலத் தமிழகம்—விவரிக்க வேண்டாம்—பார்க்கிறோம். இனி எவ்வாறு இருக்க வேண்டும்? உங்கள் வாழ்க்கை எந்தத் தமிழ் நாட்டில்—எப்படிப்பட்ட தமிழ் நாட்டில் அமைய வேண்டும் ?

முரசின் ஒலியைப் பின்பற்றி வாருங்கள் !

# என் ஆசை

தே. போ. மீனாட்சிசுந்தரனார்

"ஆசைக் கோர் அளவில்லை." வீண் ஆரவாரமும் பெருமை பேசிக் கொள்வதும் இழிவின் அறிகுறிகளேயாம். உலகம் போற்றத் தமிழன் வாழ வேண்டும். அதுவே என் பேராசை. எல்லாத் துறைகளிலும் தமிழன் உலகிற் குதவினாலன்றோ அவன் பெயர் உலக மக்கள் நாவில் உலாப்புறம் போதல் கூடும். பழம் பெருமை பேசுவதால் பழைய மக்களது பெருமையும், இன்றைய மக்களது சிறுமையுமே வெளியாகும். ஒவ்வொரு தமிழனும் தமிழ் நாட்டின் உயர்வும், தமிழின் சீரும் தன்னாலேயே வாழும் அல்லது தன்னாலேயே வீழும் என உறுதியாக நம்பித் தமிழின் ஒப்புயர்வற்ற உட்கோளுக்கேற்ப வாழ முற்படுதல் வேண்டும்.

உரிமையே தமிழனது உயிர்ப்பு. எத்துறையிலும், எங்கும் அது வாழ வேண்டும்; அன்பே தமிழனது உயிர்; அதன் உண்மையை உலகம் அறியுமாறு செய்தல் வேண்டும். அறிவே தமிழனது வடிவம்; அறிவுலகைப் படைத்தல் வேண்டும். அஞ்சாமையே அவனது வீறு; அதன் திறத்தை உலகம் அறிதல் வேண்டும். கலையே அவனது கோயில்; அவ்வழி பாடு சிறக்க வேண்டும். பண்ணிசைந்த பாவே அவனது ஒலி; அத்தமிழ் முழக்கம் உலகெங்கும் பரவி இன்பத்தை ஊட்டுதல் வேண்டும். தொண்டே அவனது இயக்கம்; அன்பொழுகும் அறிவுத் துறையில் அந்தக் கனிந்த தொண்டு, விஞ்ஞான முறையே, காற்றிலும், தரையிலும், கடலிலும் இயற்கையோடியற்கையாகப் பெருங்கலையாக இயைந்து மக்

களைக் கடவுளாக்கி உலகினை வளங்கொழிக்கும் இன்பத் துறக்கமாக வீடே உண்மை வீடாதல் வேண்டும். 'அ, ஆ' என எழுதத் தொடங்கு நாளில் இருந்து இந்தத் தமிழ் நிலையில் ஒவ்வொரு தமிழ்க் குழவியும் வாழ முந்தவேண்டும். குப்பைவாரும் தொழிலேயாயினும் ஒப்புயர்வின்றிக் கடமையையே நோக்கமாகச் செய்து வாகை சூடுதல் வேண்டும். 'செய்வன திருந்தச் செய்;' 'சீர்பெற நில்' ஈதே நமது மதமாதல் வேண்டும். அவ்வாறாயின் பல ஐயன்ஸ்டைன்களும், பல டால்டன்களும், பல போர்டுகளும், பல எடிசன்களும், பல ஷேக்ஸ்பியர்களும், பல காந்திகளும், பல கலியாண சுந்தரனார்களும் வாழுமிடமாகத் தமிழ்நாடு உலகின் உயிர் நிலையாகும். அவரது தமிழினை உலகம் போற்றும்; வாழ்த்தும். அவன் பாட்டினை உலகம் பாடும்; அவன் எழுத்தினை உலகம் ஓதும். அன்றே தமிழ் உலகப் பொது மொழியாகும். தமிழ் நாடு உலகில் உயர் தனி நாடாகும். தமிழா என் ஆசை நிறை வேறும்! நிறைவேறுதல் உன் கையில் உள்ளது.

# புதிய தமிழகம்

இளவழகனார்

உலகத்தில் 'தமிழகம்' என்பதும் ஒரு பகுதி. ஆனல், அது பழைமை வாய்ந்த பகுதி; பெருமை சிறந்த பகுதி. தமிழகத்தை உலகத்தின் 'தாயகம்' என்றே சொல்லலாம். ஆயினும், இளமை மாறாது இன்றும் அது கன்னித் தமிழகமாகவே விளங்குகின்றது!

பழைமை எவ்வளவு கூறலாமோ அவ்வளவு புதுமையுங் கூறத்தக்க ஆற்றல் இத்தமிழகத்திற்கு உண்டு; இயல்பாகவே உண்டு. அந்த ஆற்றலை அறிந்துகொள்ளவேண்டும். அறிந்து போற்றவேண்டும். போற்றப் போற்ற, இத் தமிழகம் மேலுமேலும் புதுமை கமழ்ந்து வீறும்; விளங்கும். போற்றுவார்க்கும் விரைந்த வளநலம் பெருகும். என்ன ஆற்றல் அது?

தமிழ் மக்களின் பெருமையெல்லாம் தமிழ் மக்களைப் பொறுத்தது; தமிழ்மக்களின் பெருமையெல்லாம் தமிழ் மொழியில் நிரம்பித் ததும்புகின்றன. தமிழகமும் தமிழ் மக்களினமும், தமிழ் மொழியும் இவ்வாறு பெருமை மிகுந்து நோயற்ற பெருவாழ்வு-இளமை குன்றாத புதுவாழ்வு-அதாவது நலம் நிறைந்த அமுத வாழ்வு பெற்றிருக்கின்றன. நிறைந்துள்ள அந்தச் சாவா அமிழ்தமே தமிழகத்தின் ஆற்றல் என்பது!

என்ன அமிழ்தம் அது; என்ன அமிழ்தம் என்று அதைச் சொல்வது! அமிழ்தத்தை அமிழ்தமென்றுதான் சொல்லவேண்டும். அப்படி அமிழ்தமாகவே அந்த ஆற்றல்

விளங்குகின்றது. பண்டுதொட்டுத் தமிழகத்தில் எங்குந் தளதள வென்று நிரம்பிவழியும் அவ் வமிழ்தத்திலிருந்தே உலகம் உய்ந்து வருகின்றது. உலகத்தின் உணவே அது! சுருக்கி வேறொரு சொல்லாற் சொன்னால் அந்த அமிழ்த ஆற்றலைப் 'பெருந்தன்மை' என்று சொல்லலாம். விரித்தால் அது பற்பல கருத்துக்களாக விரியும்.

மேன் மேலும் புதிய தமிழகத்தை உருவாக்க விரும்புவோர், 'பெருந்தன்மை' என்னும் இவ்வமிழ்தம் தம்மிடத்தும் பிறரிடத்தும் மேன்மேலும் ஊற்றெடுத்துப் பொங்கிப் பெருகுமாறு செய்து கொள்ள வேண்டும்.

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக் கியாதுமோர் குறைவிலை;
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே!

திருஞானசம்பந்தர் அருளிச்செய்த இத்தனித் தமிழ்த் தேவாரத்தில், உலகத்தலைவனை இறைவன் 'பெருந்தகையோன்' என்று பேசப்பட்டான். 'அப் பெருந்தன்மையோன் தொடர்பு எதிர்ப்பட்டதனால், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், ஏனைய நல்ல கதிகட்குங் குறைவில்லை' என்பது இவ்வருட் பாடலின் கருத்து. எனவே, தமிழகத்தின் ஒவ்வொரு மூச்சும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு செயலும் 'பெருந்தன்மை'யே என்க! தமிழர் இறைவனும் அவ்வுருவினன். தமிழகம் இப் பண்பிலிருந்து வழுவினால், அது, நிலையில் வழுவியதேயாகும்.

"தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

என்னும் அமிழ்த மொழி நினைவுக்கு வருகின்றது.

'பெருந்தன்மை' என்னும் இந்த அமிழ்த ஆற்றலே தமிழின்-தமிழ்மக்களின்-தமிழகத்தின் மாறா இளமைக்குக் காரணம். நாளும் இச் சீரிளமைத் திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்துதும்.

" உண்டால் அம்ம இவ் வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்;
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே "

என்னும் புறநானூற்றுப் பாடல் இப் பெருந்தன்மைப் பண்பை விரித்து விளக்குகின்றது. உலகம் இளமை குன்றாது என்றென்றும் நிமிர்ந்து நிலை பெற்றிருப்பதற்குக் காரணம் இக் கண்ணியப் பண்பே என்னும் அடிப்படையான உண்மையையும் இப்பாட்டு நன்கு நிறுவுகின்றது. எனவே, 'புதிய தமிழகம்' என்பது இம்மேன்மைப் பண்பிலிருந்தே மேன் மேலுங் கிளைத்தோங்குதல் வேண்டும்.

சுருங்கிய வடிவில் இப்பண்பின் விரிவை ஒரு முறைப் படுத்திக் கூறினல் அது கீழ் வருமாறு அமையும் :

'ஊன் உணவு நீங்கித் தாய்மொழி, தாய்நாட்டுக் கடமைகளை மறவாமல், எவரோடும் பகையின்றி, அருளியல் உணர்வோடு, நாளுக்கு நாள் வாழ்க்கை வளர்ச்சியில் ஓங்கிக்கொண்டு வருதலாகிய கோள்கை யும், உண்மையும், ஒழுக்கமும், தொண்டும், முயற்சி

யும், இணக்கமுங் கொண்டு விளங்குதலாகிய நடக்கை
யும் பெற்றிருத்தல்'

என்பது. பெருந்தன்மை என்பதும் அமுத ஆற்றல் என்ப தும், தமிழகத்தின் மூவா நலம் என்பதும், இத்திறமையே யாகும். பெருந்தன்மைக்கு மாறு கூறுவோர் யாரும் இரார்; இருந்தால் அவர் நிலைபெறூர்; சிறிதிருக்குங் கால மும் மதிப்புறூர்; நலமும் பெறூர்.

தமிழகம் பண்டு தொட்டு உலகுக்குக் கொடுத்து வருஞ் செய்தி இது. இச் செய்தியின் ஏடுகளே தமிழ் மொழியில் உள்ள 'சங்க இலக்கியங்கள்!' ஓரே நூலாக அவற்றைப் பிழிந்து வடித்த வடிவமே 'திருக்குறள்' என் பது. அதனை முன்னின்று உருவாக்கி விடுத்த தமிழர் தூதர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்!

1. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

2. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

3. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப, யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

4. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

5. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல், மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

1. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

2. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

3. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

4. அருமை யுடைத்தென் றசவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

5. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

யாரையும், எதனையும், என்றும் நிலைக்க வைப்பதும், நலம் பெறச் செய்வதுமான இப்பெருந்தகைமைப் பண்பை மக்கட் பிறப்பினர் ஒவ்வொருவரும் பின்பற்றி ஒழுகுதல் இன்றியமையாதது. தமிழ் மக்களின் இயற்கை யுரிமை யாக இது திகழ்தலின், தமிழகத்தின் புதிய புதிய தலை முறைகள் இத்தகைமை யமிழ்திலேயே வளர்ந்து வளர்ந்து கொழுந்தோடுதல் வேண்டும். அடிப்படையாதலின், இதுவே, முதலிற் கருத்திருத்துதற்குரியது. கலையியல், அறிவியல், பொருளியல், அரசியல், அழகியல், அறவியல், அருளியல் என்னும் அனைத்து நலங்களின் வித்துக்களும் இப்பெருங்குணக் கனியில் அமைந்துள்ளன.

ஆயிரக் கணக்கான, நூறாயிரக் கணக்கான தமிழினை ஞரை, தமிழ் மகளிரை இத்தகைமை யமிழ்து நிறைந்த எழிலுருவத்திற் காணக் கண்கள் விதுவிதுப் படைகின்றன. அக் காட்சியில், புதிய தமிழகம்—புதுமை கமழுந் தமிழ கம்—என்ஞான்றும் மூவாதும் சுருங்காதும் பெருகியோங் குந் தமிழகம் கால்கொண்டுள்ளது !

# தமிழருக்கும் சுயநிர்ணயம்

ம. பொ. சிவஞான கிராமணியார்

"இந்தியாவுக்குச் சுதந்தரமா? இதோ கொடுத்துவிட்டோம் எடுத்துக் கொள்ளுங்கள்" என்ற ஆரவாரத்துடன் பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷ்டியார் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

சுமார் இருநூறு ஆண்டுகளாக இந்தியாவை ஆண்டு அதன் செல்வத்தைச் சுரண்டிவந்த பிரிட்டிஷார் இப்போது இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்து செய்துவிட்டதாகக் கூறுகின்றனர். பிற நாட்டு மக்களை அடக்கியாள்வதில் சலிக்காத ஏகாதிபத்தியம்கூடச் சலித்துப் போய்விட்டதாம்! சுரண்டல் கொள்கையில் சோர்வடையாத வெள்ளை வர்த்தகக் கூட்டமும் சோர்வடைந்து விட்டது போலும்! இது உண்மையானால் வரவேற்கத் தக்கதே. இந்தியாவின் இணையற்ற தலைவரான காந்தியடிகள் இது உண்மையென்றே நம்புகிறார். இந்திய மக்களையும் நம்புமாறு வற்புறுத்துகிறார்.

காந்தியடிகளின் மனப்பூர்வமான ஆசி கிடைத்துவிட்டது. காங்கிரஸின் ஆமோதிப்பும் கிடைத்துவிடும்போலிருக்கிறது. முஸ்லிம் லீகும் ஏற்றுக் கொள்வதென முடிவு செய்து விட்டது. எனவே திட்டம் அமுலுக்கு வருவது அநேகமாகத் திண்ணமென்றே கூறலாம். இங்நிலையில் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் தமது வருங்கால வாழ்வுக்கும் தமது சந்ததியாரின் வாழ்வுக்கும் ஆதாரமாக அமையும் அந்தத் திட்டத்தை நன்கு ஆராய வேண்டியது அவசியமாகும்.

பிறப்பால், பேசும் மொழியால், வாழ்க்கை நெறியால் நான் ஒரு தமிழன். தமிழகமே என் தாயகம். ஆகவே பிரிட்டிஷ் திட்டத்தைப் பார்க்குந்தோறும், அதன் ஒவ்வொரு அம்சத்தையும் படிக்குந்தோறும் தமிழன் என்ற எண்ணத்தோடேயே பார்க்கிறேன்; படிக்கிறேன். இத் திட்டம் "இந்தியாவின் விடுதலைச் சாசனம்" என்கின்றனர் அதன் கர்த்தாக்கள். அப்படியானால் அதில் தமிழகத்தின் பூரண விடுதலைக்கும் தடையில்லாது உரிமை தரப்பட்டிருக்கிறதா என்றே பார்க்கிறேன்.

"இந்திய மக்களின் சுயநிர்ணய உரிமையை இத் திட்டம் ஒப்புக் கொண்டுவிட்டது" என்கின்றனர் தூது கோஷ்டியினர். இது உண்மையானால் அத்திட்டத்தில் தமிழருக்கும் சுயநிர்ணயம் உண்டா என்று தடவிப் பார்க்கிறேன். இவ்வாறு தமிழன் என்ற இன உணர்ச்சியோடு பிரிட்டிஷ் திட்டத்தையும் அதன் மீது பிரிட்டிஷ் மந்திரிகள் தந்த விரிவுரைகளையும் பன்முறைப் படித்து ஆராய்ந்தபின் எனக்கு ஏற்பட்ட எண்ணங்களையே இக்கட்டுரையில் வெளியிடுகின்றேன்.

பிரிட்டிஷ் திட்டத்தை ஆராயு முன்னர் இந்தியாவின் இயற்கை அமைப்பு, இந்திய சமுதாயத்தின் இனப் பிரிவுகள், அவற்றின் உரிமைகள் ஆகியவற்றைச் சிறிதளவு ஆராய்வது அவசியமாகும்.

இந்தியா பல்வேறு நாடுகளைக் கொண்ட ஒரு உபகண்டமாகத் திகழ்கின்றது. நடுநிலைமையுடன் இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்தோர் அனைவரும் இந்த முடிவுக்கே வந்திருக்கின்றனர். சீதோஷ்ண நிலை, மண்வளம், பொருளுற்பத்தி, மக்களின் பழக்க வழக்கங்கள் பேசும் மொழிகள்

முதலியன யாவும் இந்தியாவிலுள்ள பல் வேறு நாடுகளி லும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன. இந்தியாவிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இனத்தினர் வாழ் கின்றனர். அந்த இனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி மொழி, நாகரிகம், சரித்திரம் ஆகியவைகள் இருந்து வருகின்றன. இங்ஙனம் பல நாட்டுப் பண்புகள் அமைந் திருப்பதனாலேயே இந்தியாவை ஒரு உபகண்டமென்று சொல்ல வேண்டி யிருக்கின்றது.

மேலும், இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க் குங்கால் மேற்சொன்ன நாடுகள் ஒவ்வொன்றிலும் தனித் தனி அரசாங்கங்கள் நடந்து வந்திருப்பதாகவும் தெரிகிறது. பிரிட்டிஷார் வரும் வரையிலும் கூட இந்தியாவானது மேற் சொன்னவாறு பல்வேறு நாடுகளாகப் பிரிந்து வெவ்வேறு அரசர்களால் ஆளப்பட்டு வந்திருப்பதை மறுப்பதற்கில்லை. சரித்திரந் தொடங்கிய காலத்திலிருந்து சிற்சில சமயங்ளில் மட்டும் இந்தியாவின் பெரும்பகுதிகள் ஒரே மன்னரால் ஆளப்பட்டதாகத் தெரிகிறது. அசோக சாம்ராஜ்யம், மொக லாய சாம்ராஜ்யம் ஆகியவற்றை இவற்றிற்குச் சான்றாகக் கூறலாம். அப்போதும் கூட அந்தச் சாம்ராஜ்யத்திற்குக் கட்டுப்படாமல், கப்பஞ் செலுத்தாமல் தனித்து நின்று சுதந்தரமாக அரசாண்டனர் நம் தமிழ் மன்னர்கள்.

மேற் சொன்ன சாம்ராஜ்யங்களும் நெடுங்காலம் நீடித்திருக்க முடியாது முறிந்து வீழ்ந்தன. அசோகரது அன்பு மதங்கூட அவரது சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றத் தவறி விட்டது. ஆங்கிலேயர்களால் இந்தியாவில் ஒரே அரசாங்கத்தை நிலைக்கச் செய்வதும், இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்தைப் பரப்புவதும் ஓரளவு முடிந்தது என்

பது உண்மைதான். ஆனால் அவர்கள் யாருடைய நன்மைக் காக அப்படிச் செய்தார்கள்? நமக்காக அல்ல. ஏகாதிபத் தியம் என்றென்றும் நிலைத்து நிற்கவேயாகும். பல நாட்டுத் தத்துவத்தைவிட "ஒரு நாடு" என்ற தத்துவமே ஏகாதிபத் தியத்திற்கு உயிராக இருந்தது. ஆனால் பிரிட்டிஷார் கற்றுத் தந்த 'இந்தியா ஒரே நாடு', 'இந்தியர் அனைவரும் ஒரே இனம்' என்ற பாடங்கூட இந்தியாவிலுள்ள தேசிய இனங்கள் தங்கள் தங்கள் தனித்த இன உணர்ச்சியையும், பண்பாட்டுப் பற்றையும் மறக்கச் செய்யத் தவறிவிட்டது. காரணமென்ன? இது தவறானதும் இயற்கை நிலைக்குப் பொருந்தாததுமேயாகும். இந்தத்தவறான வழியில் இந்தியா முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ் வைத்து இவ்வளவு காலம் பிரிட்டிஷாரால் ஆளமுடிந்ததற்குக் காரணம் அவர் களது ஆயுதபலமும், பிரித்தாளும் தந்திரபுத்தியுமேயாகும்; ஒரு தவறை நிலை நாட்ட இன்னொரு தவறு செய்தே தீர வேண்டுமல்லவா?

சுமார் நூற்றாண்டுகளுக்கு மேலாக நாமாக வளர்த்துக் கொண்ட தேசியமும் அதே கதியைத்தான் அடைந்துள் ளது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். வடக்கே வங்காளத்திலோ, தெற்கே ஆந்திர நாட்டிலோ இன உணர்ச் சியும் தனிநாட்டுப் பற்றும் இல்லாத தேசபக்த வங்கா ளியையோ, ஆந்திரரையோ நாம் பார்க்க முடியாது. பல் வேறு சமயங்களில் அவர்களது இனவுணர்ச்சியானது தேசிய உணர்ச்சியையும் மிஞ்சிநின்றதை நாம் பார்த்திருக் கிறோம். சமீபகாலமாக தமிழ் மக்களாகிய நாம் அதன் பயனை அனுபவித்தும் வருகிறோம். இதற்குக் காரண மென்ன? இந்த இனப்பற்று அழிக்க முடியாத ஒன்று என் பதேயாகும். உண்மையில் அது அழிக்க வேண்டிய அவ சியமில்லாத ஒரு நல்ல பண்புமாகும்.

இந்தியாவிலுள்ள பல்வேறு நாடுகளின் சரித்திரம் தான் இந்தியாவின் சரித்திரம்; இந்நாடுகளில் வாழும் வெவ்வேறு இனங்களின் நாகரீகந்தான் இந்தியாவின் நாகரீகம். இஃதன்றி இந்திய சரித்திரமென்றோ, நாகரீக மென்றோ தனியாக ஒன்றில்லை.

இந்தியாவில் ஒரு இனத்தையும் அதற்குரிய தாயகத் தையும் எதைக் கொண்டு நிர்ணயிப்பது? இது முக்கிய விஷயமே. ஓரே மொழி, ஓரே கலாசாரம், ஆகியவைகளை உடையோரைத் தனி இனமாகவும், அவர்கள் சேர்ந்தாற் போல் வாழும் பிரதேசத்தை அவர்களுக்குரிய தாயகமாக வும் கொள்வதே சரியான முறை. இதன்படிப் பார்த்தால் இந்தியாவில் தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், கூர்ஜரர், வங்காளத்தர், பாஞ்சாலத்தர், மராட்டியர் போன்ற பதினேழு தேசீய இனங்களும், அவற்றின் தாய கங்களும் இருக்கின்றன.

இந்தப் பதினேழு நாடுகளும் தத்தம் எல்லையில் வேறு எவர் தயவுமின்றி, தனி அரசு புரியக்கூடிய அளவுக்கு மக்கள் தொகை, பொருள் வளம், நிலவளம் ஆகியவைகளைப் பெற்றிருக்கின்றன.

ஆகவே, இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டத்தை வகுக்கும் யாரும் மேற்சொன்ன நாடுகளின் அமைப்பைச் சீர்குலைக்காது, அதில் வாழும் இனங்களின் பண்பாட்டைப் பாழாக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் சுதந்திர இந்தியா அமைதியாக வாழமுடியாது என்பது திண்ணம்.

இந்திய நாடுகள் ஒவ்வொன்றும் சுதந்தரமாக இருக்க வும், இந்திய தேசீய இனங்கள் ஒவ்வொன்றும் சுயமாக

முயற்சி செய்து வளர்ச்சியடையவும் வேண்டுமானால், இந்திய தேசீய இனங்கள் தங்கள் தங்கள் தாயகங்களில் தங்கள் இஷ்டப்படி சுதந்திர அரசை நிறுவிக் கொள்ளும் சுய நிர்ணய உரிமை பெற்றதாயிருக்க வேண்டும்.

காங்கிரஸ் மகாசபை கூட கலாசார அடிப்படையில் பிரதேச வாரி சுயநிர்ணயம் வழங்குவதென்ற கொள் கையை அங்கீகரிப்பதுடன், 'இந்தியாவிலுள்ள எந்த ஒரு பிரதேசத்தையோ அதில் வாழும் மக்களையோ இந்திய சமஷ்டியில் சேரும்படி கட்டாயப்படுத்துவதில்லை' என்று வாக்குறுதியும் கொடுத்திருக்கிறது. இந்தியாவின் இயற்கை அமைப்பையும் அதன் நீண்ட கால சரித்திரத்தையும் தற்போதைய அநுபவத்தையும் ஒட்டி நிற்கும் மேற்சொன்ன இனவாரி சுய நிர்ணயம்—சுய அரசு என்ற கொள்கையை எல்லா தேசீய இனங்களும் சமரசமாக ஒப்புக் கொண்டு அமுலுக்கு வருமானால், அந்தச் சுதந்தர அரசுகள் தாமாக ஒரு மத்திய சமஷ்டியில் தாமதமின்றிக் கலந்துகொள்ளும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டியதில்லை.

அப்படி அமைக்கப்படும் சமஷ்டி அரசாங்கந்தான் பலம் வாய்ந்ததாக இருக்கும். அன்பை அடிப்படையாகக் கொண்ட அரசாகவும் அமையும். அஃதல்லாமல் காரணங்கள் எவ்வளவுதான் நியாயமானவையாக இருப்பினும் கட்டாயத்தின் மீது அமைக்கப்படும் மத்திய சமஷ்டியானது பலமற்றதாக இருப்பதுடன் அதிகார தோரணையிலும் ஆயுதபலத்தின் ஆதாரவிலும் தான் காலந்தள்ள நேரிடும்.

இந்த அகில இந்தியக் கொள்கைப்படித்தான் தமிழரது வருங்காலத்தை நிர்ணயிக்க வேண்டும். மேலே

நான் கூறியவாறு இந்தியாவில் பல நாடுகள் உண்டு என்ற கொள்கைப்படி, தமிழகம் தனிநாடாக ஆகிறது. இந்திய சமுதாயம் பல இனங்களடங்கியது என்ற வாதப்படி தமிழர் தனி இனமாக ஆகிறார்கள். இனவாரி சுய நிர்ணயம்—சுய அரசு என்றால், தமிழருக்கும் சுய நிர்ணயம்—சுய அரசு என்றே ஆகிறது. இந்தச் சுய நிர்ணய—சுய அரசு உரிமை பிறர் கொடுத்துப் பெறவேண்டிய அவசிய மில்லாமல் தமிழரின் பிறப்புரிமையாக இருக்கிறது.

இந்த பிறப்புரிமை பிரிட்டிஷ் திட்டத்தில் தமிழருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்வோம். பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷடியினரின் பார்வையே தவறான வழியில் சென்றிருப்பதைத் திட்டத்தில் தெளிவாகக் காண்கிறோம். அவர்கள் இந்தியாவை ஒன்றோடொன்று உறவு கொண்ட பல் வேறு தேசிய இனங்கள் வாழும் உபகண்டமாகக் காணவில்லை. தீராப் பகைமை கொண்ட மூன்று மதங்கள் ஒன்றோடொன்று போர்புரியும் போர்க்களமாகவே காண்கின்றனர்.

இந்த அடிப்படையிலேயே பிரிட்டிஷ் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இந்தியாவின் இயற்கை நிலையை ஆதாரமாகக் கொள்ளாமல் கலக நிலையையே காரணமாகக் கொண்டுவிட்டனர். இது பெரிய தவறாகும். அந்தத் தவறுதான் திட்டத்திலுள்ள தீமைகளுக்கெல்லாம் காரணம். தூது கோஷ்டியினர் அறியாமையாலோ அல்லது ஏதாவது ஒரு கட்சியின்மீது கொண்ட அன்பு அல்லது பயம் காரணமாகவோ இந்தத்தவறு செய்ததாக எண்ணுவதற்கு இடமில்லை. பண்டுதொட்டுக் கடைப்பிடித்துப் பழக்கப்பட்டுப்போன பிரித்தாளும்

தந்திரத்தினுலேயேயாகும். அப்படி இல்லை யென்றால் வெளியேறத் தயாராகிவிட்ட இவர்களுக்கு இந்த வேதனை யெல்லாம் எதற்காக ?

மேற்சொன்னவாறு மதப் பார்வையைக் கொண்டே பிரிட்டிஷ் திட்டம் மாகாண அரசாங்கங்களுக்கும் மத்திய யூனியனுக்கும் இடையில் மாகாணங்களின் தொகுதி அரசாங்கங்களைப் புகுத்துகிறது.

பொதுவாக மாகாணங்கள் கலாசார அடிப்படையில் தொகுதி சேர அனுமதிக்கப் படுமானல், அது தமிழர் வரவேற்கத்தக்கதேயாகும். ஏனெனில், இதன்படி தமிழரசு அவசியமானல் தன்னோடு நெருங்கிய கலாசாரத் தொடர்புடைய ஆந்திர, கேரள, கன்னட இன அரசுகளுடன் சேர்ந்து ஒரு சிறிய உப சமஷ்டியை ஏற்படுத்திக்கொள்ள முடியும். ஆனல் தூது கோஷ்டியினர் மாகாணங்கள் தொகுதி சேரும் விஷயத்தில் வேறுவித விஷமத்தனமான யோசனையைக் கிளப்பி விட்டிருக்கின்றனர். அதாவது மதங்களின் அடிப்படையில் மாகாணங்களின் தொகுதிகள் அமைய வேண்டுமென்று யோசனை கூறுகின்றனர். இந்த யோசனையைக் காரியாம்சத்தில் நிறைவேற்றவும் திட்டம் தருகின்றனர்.

அவர்கள் திட்டப்படி இந்தியாவில் மாகாணங்களுக்கும், மத்திய சமஷ்டிக்கும் இடையில் 'ஏ' 'பி' 'சி' என்று மூன்றுவித உப சமஷ்டிகள் அமைக்கப்படும்.

'ஏ' உப சமஷ்டியானது ஹிந்து மாகாணங்கள் அடங்கியதாகவும், 'பி', 'சி' ஆகிய இரண்டு உப சமஷ்டிகளும் முஸ்லிம் மாகாணங்கள் அடங்கியதாகவும் இருக்கும் இந்தத் திட்டப்படி தமிழ் நாடானது ஹிந்து மாகா

ணங்களின் தொகுதியில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்படு கிறது. இதைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்வதானால் தமி ழகத்தில் தமிழரசு நடப்பதற்குப் பதிலாக தமிழகத்தில் ஹிந்து ராஜ்யம் நடப்பதாகவே ஏற்படும். இதனால் தமி ழினம் ஹிந்துவென்றும், முஸ்லிமென்றும் பிளவுபட்டு முடிவில் அழியவும் நேரும்.// அது எப்படி என்பதைக் கவனிப்போம்.

தமிழினம் என்பது ஹிந்து முஸ்லிம் கிறிஸ்துவ மதத் தினர் அனைவரும் அடங்கியதேயாகும். ஒரு முஸ்லிமோ அல்லது கிறிஸ்துவரோ ஆத்மீகத் துறையில் அமர ஞானம் பெறுவதற்கு இதர தமிழர்களிலிருந்து வேறுபட்ட முறையைக் கடைப்பிடிப்பதனாலேயே அவர் தமிழரல் லாதவராகிவிட மாட்டார். ஒவ்வொரு முஸ்லிமுக்கும் பிறப்பால் தமிழகமே தாயகம்; தமிழ்மொழியே தாய் மொழி. ஆனால், பிரிட்டிஷ் திட்டப்படி தமிழ் நாடு ஹிந்து மாகாணங் கள் தொகுதியில் சேருமானால் தமிழ் நாட்டிலுள்ள முஸ்லிம் களுக்குத் தமிழகம் தாயகமாக இருக்க முடியுமா ? முடியா தென்றால் அவர்கள் தங்கள் தாயகத்திலேயே அந்நியராக அல்லது மைனாரிட்டியாக தங்கள் உரிமைக்குக் கையேந்தி வாழ வேண்டுமா ? ஆழ்ந்து யோசித்தால் இது தமிழ் இனத்தை மதக் கோடரி கொண்டு பிளப்பது போலாகும்.

அரசியல் நிர்ணய சபையின் அமைப்பிலும் இந்த விபரீதத்தையே காண்கிறோம்.|அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் தேசிய இனங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு மதங்களின் பேரிலேயே ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களைத் தற் போதுள்ள மாகாண சட்ட சபைகளின் அந்தந்த வகுப்பு அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்க வேண்டுமாம். அவ்வாறு

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் தங்கள்தங்கள் மதத்தின ருக்குப் பிரதிநிதியாக இருப்பார்களே யொழிய, தாங்கள் வாழும் மாகாணத்திலுள்ள எல்லா மக்களுக்கும் பிரதிநிதிக ளாக இருக்கமாட்டார்கள்; இருக்கவும் முடியாது.

அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் தமிழ் நாட்டின் 'முஸ்லிம்' பிரதிநிதிகள் தமிழ் நாட்டுக்கு வேண்டிய அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் எப்படி யிருக்கவேண்டும் என்பதைப் பற்றி கவனம் செலுத்த மாட்டார்கள். முஸ்லிம் மதத்தினரின் வாழ்விற்காகவும் தமிழ்நாட்டிற்குச் சம்பந்தமில்லாத பாக்கிஸ்தானுக்காகவுமே அவர்கள் போராடுவர். ஏனெனில் அதுதான் அவர்களின் தாயகம்! அதேபோல தமிழ் நாட்டின் 'ஹிந்து' பிரதிநிதி களும் ஒற்றுமைப்பட்ட தமிழினத்தின் உரிமையைக் காக்கவோ, தமிழகத்தில் தமிழரசு காணவோ கவலை கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய ஆசையெல்லாம் அகண்ட ஹிந்துஸ்தான் மீதும் பகையெல்லாம் பாக்கிஸ் தான் மீதும் தான் இருக்கும்.

சரியாகச் சொன்னால், பிரிட்டிஷ் திட்டப்படி தேர்ந் தெடுக்கப்பட்டு அரசியல் நிர்ணய சபைக்குச் செல்லும் தமிழர்களான ஹிந்துவோ, முஸ்லிமோ தமிழினத்தின்— தமிழ் நாட்டின் ஒற்றுமைக் குணத்தின் பிரதிநிதியாக இல்லாமல் வட இந்தியாவின் வேற்றுமை வெறிக்கு வாரி சாக நிற்பார்கள். என்ன விபரீதம்!

பிறப்பால் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களான முஸ்லிம்களை தங்கள் தாய் நாட்டிலேயே அந்நியராக ஆக்கிவைக்கும் ஒரு அரசியல் திட்டத்தை-தமி ழினத்தை இந்துவென்றும் முஸ்லிமென்றும் பிரித்து வைக்

கும் பிரிட்டிஷ் தீர்ப்பை—மானமுள்ள எந்தத் தமிழரேனும் ஏற்க முடியுமா ?

வட நாட்டில் 'சா' குடிப்பதிலும் சமயச் சண்டை. அங்கே ஓயாது நிகழும் மதக் கலகங்களை உன்னுவா ரெவரும் "இந்தப் போர் என்று முடியுமோ ?" என்ற ஏக்கமே கொள்வர். தமிழ் நாடோ அத்தகையதன்று. அராபிய நாட்டிலிருந்து வாழ வந்த முஸல்மான்களுக்கு சேர நாட்டில் வாழ இடமளித்து, 'மாப்பிள்ளை' என்ற மதிப்பிற்குரிய பெயரும் தந்து மகிழ்ந்தவர் தமிழர். தமிழ் வழிப்பட்ட சமய நூல்களிலோ சரித்திர நூல்களிலோ ஹிந்து-முஸ்லிம் பிணக்குகளுக்குச் சான்று காண முடியாது. தமிழினத்தின் மேற்சொன்ன சமய வேற்றுமையற்ற வரலாற்றைப் பிரிட்டிஷ் தூது கோஷ்டியினர் அறியார் போலும்! அறிந்திருந்தால் இந்திய தேசீய இனங்களை ஹிந்துவென்றும் முஸ்லிமென்றும் பிளக்கும் இந்தத் திட்டத்தைத் தமிழ் இனத்தின்மீதும் திணிக்கத் துணிந்திருக்க மாட்டார்கள்.

இனி, பிரிட்டிஷ் திட்டத்தில் தமிழர்களை மட்டும் பாதிக்கும் விஷயங்களைக் கவனிப்போம்.

மொழிவாரி மாகாணங்கள் பிரிக்க வேண்டியதைப் பற்றி பிரிட்டிஷ் திட்டத்தில் பேச்சே இல்லை. என்றாலும் அரசியல் நிர்ணய சபைக்கு அப்படிச் செய்யும் உரிமை உண்டென்றே நம்பலாம். ஆனால், மொழிவாரி மாகாணங்களைப் பிரிப்பதற்கு முன்னரே அரசியல் நிர்ணய சபைக்கு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படுவது கூடாது. ஏனெனில், தற்போதுள்ள நான்கு இனத்தவர் அடங்கிய சென்னை சட்டசபையில் தமிழ் இனத்தவர் தங்கள் ஜனத் தொகைக்குரிய பிரதிநிதித்துவத்தை அடைய முடியுமா என்பது

சந்தேகமே. அந்த சட்ட சபையின் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் தமிழ் நாட்டு அங்கத்தினர்களே அதிகம் என்றாலும், இவர்களிடம் இனப்பற்றோ மாகாண நலன்களைக் காப்பதில் கட்டுப்பாடோ சிறிதளவும் கிடையாதென்பதை சமீபகால சம்பவங்கள் மூலம் நன்கு அறிந்திருக்கிறோம்.

மேலும், அரசியல் நிர்ணய சபைக்கு வயது வந்த வாக்காளர்களால் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு மாறாக பிரிட்டிஷ் திட்டம் தற்போதுள்ள மாகாண சட்டசபையின் அங்கத்தினர்களைக் கொண்டே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கூறுகிறது.

இதுவும் தமிழ் மக்களுக்குக் கேடு சூழ்வதேயாம். தற்போதுள்ள சட்டசபையிலுள்ள தமிழ்நாட்டு அங்கத்தினர்கள் தமிழகத்தின் எல்லைக்கோடு, அரசியல் அமைப்பு, பொருளாதாரத் திட்டம் ஆகிய தமிழ் வழிப்பட்ட பிரச்சினைகள்மீது போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் தேர்தலின்போது ஒரே விஷயந்தான் மக்களின் முன்பு பிரதானமாக வைக்கப்பட்டது. அது தான் வெள்ளையரை வெளியேற்றுவது என்ற ஆகஸ்ட் தீர்மானம். அன்றைய நிலைமையில் அதைவிட வேறொன்றையும் எதிர்பார்த்திருக்கவும் முடியாது; எதிர்பார்ப்பதும் நியாயமல்ல.

இந்த நிலைமையைச் சாதகமாகக் கொண்டு கடந்த சட்டசபைத் தேர்தலில் தங்களைத் தமிழர் என்று சொல்லிக் கொள்ள மறுப்பவர்களும், சென்னை நகரம் ஆந்திரர்களுடையதே என்று ஆரவாரிப்பவர்களும் கூட தமிழர்களால்-தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்

டிருக்கிறார்கள். இத்தகையவர்கள், சுய நிர்ணய உரிமை பெறுவது, சுதந்திரத் தமிழரசை அமைப்பது என்ற எழுச்சி கொண்ட தமிழர்களின் இயக்கத்திற்குப் பிரதிநிதிகளாயிருப்பது எங்ஙனம் இயலும்? ஆகவே, முதலில் மொழிவாரி மாகாணங்களைப் பிரித்து வயது வந்த வாக்காளர்கள் மூலம் அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் தேர்தலில்தான் தமிழரின் வாழ்வுக்கும், தமிழ்நாட்டின் வளத்துக்கும் பாடுபடக்கூடிய உண்மைத் தமிழர்கள் பிரதிநிதிகளாக வர வழியுண்டு.

முடிவாக, பிரிட்டிஷ் திட்டத்தைப் பின்வருமாறு திருத்தியமைக்க இன உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழரும் எழுச்சிகொண்டு கிளர்ச்சி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். அவை வருமாறு:—

1. இந்திய சமுதாயத்தை பல்வேறு தேசிய இனங்கள் அடங்கிய ஒற்றுமையுள்ள ஓரே குடும்பமாகக் கொள்ளவேண்டும்.

2. மொழிவாரி மாகாணங்களைப் பிரித்து, அந்த மாகாணங்கள்தோறும் தனித்தனி அரசியல் நிர்ணய சபைகள் அமைக்க வேண்டும். அந்தச் சபைகள் அந்தந்த மாகாணங்களில் பூர்ண சுதந்திரமுள்ள அரசாங்கங்களை அமைக்க உரிமைபெற்றதாயிருக்கவேண்டும்.

3. மேற்சொன்ன மாகாண அரசியல் நிர்ணய சபைகள் அனைத்தும் மாகாணங்களின் அரசியலை தயாரித்த பிறகு ஒன்றுகூடி மத்திய யூனியனின் அரசியலமைப்பைத் தயாரிக்கவேண்டும். இந்த அரசியல் நிர்ணய சபையானது பிரிட்டிஷ் மன்னர் அல்லது பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அனுமதியைக் கோரவேண்டிய அவசியமில்லாமல் இந்தியாவில்

சுதந்திரப் பிரகடனம் செய்யவும், அந்நிய ராணுவத்தை வெளியேற்றவும் உரிமைபெற்றதா யிருக்கவேண்டும்.

4. மத்திய யூனியன் அரசாங்கத்தின் அதிகாரங்கள், மாகாணங்கள் தாமாக விட்டுக் கொடுப்பதாக இருக்கவேண்டுமே யொழிய கட்டாயப்படுத்தி பறித்துக்கொள்வதாக இருக்கக் கூடாது.

5. மத அடிப்படையில் மாகாணங்களின் தொகுதி அமைப்பதற்குப் பதிலாக கலாசாரக் கூட்டுறவின்பேரில் தொகுதியாகச் சேர்ந்துகொள்ள மாகாணங்களுக்கு உரிமை இருக்கவேண்டும். ஆனல் எப்பொழுது, எந்த மாகாணம் அல்லது மாகாணங்களோடு சேர்ந்துகொள்வது என்பதை மாகாண சட்டசபைகளின் இஷ்டத்திற்கே விட்டுவிட வேண்டும்.

இத்தகைய திருத்தத்துடன் கூடிய திட்டந்தான் தமிழருக்கு மட்டுமன்றி இந்தியாவிலுள்ள எல்லா தேசீய இனங்களுக்கும் பூர்ண சுதந்திரத்தை அளிப்பதாய் இருப்பதுடன் இந்தியாவின் இயற்கை அமைப்புக்கும், தேசீய இனங்களின் நீண்டகாலசரித்திரத்துக்கும் பொருந்துபவையாகவும் இருக்கும்.

இதைத் தவிர தமிழினத்தை மதக் கோடரிகொண்டு பிளக்கும் ஏகாதிபத்திய திட்டத்தையோ, சமயத்தின் பெயரால் பாமர மக்களைச் சுரண்டும் முதலாளித்துவ முறையையோ தமிழர்கள் ஒரு நாளும் ஏற்கமாட்டார்கள். தமிழர் வேண்டுவது தங்கள் வருங்கால வாழ்வைத் தாங்களே நிர்ணயிக்க சுய நிர்ணயம், தங்கள் தாய்நாட்டைத் தாங்களே ஆளக்கூடிய சுயஅரசு.

தமிழர்களே, அரசு வேண்டுமென்று முரசு கொட்டுவோம்!

# புதுமைத் தமிழ்

மு. அருணாசலம்

இது பாரதி யுகம்.

பாரதி காலஞ்சென்று இப்போது இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இந்தக்காலம் நெடுகிலும், இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் அவரைப் பின்பற்றிய போக்கே எழுந்திருக்கிறது. சிறப்பாகச் சமீபகாலத்தில் தமிழின் போக்கு முழுமையும் அவருடைய போக்கைத் தழுவியதாகவே இருக்கிறது. சிறுகதை, நீண்ட பெருங்கதையான நாவல், கட்டுரை, கவிதை—எங்கும் பாரதியின் போக்கையே காண்கிறோம். உதாரணமாகக் கவிதை என்று வந்தால், கவிதையின் பொருள், சொல்லமைப்பு, உருவம், கற்பனை முதலான எல்லாவற்றிலும் ஆசிரியர்கள் பாரதியைப் பின்பற்றுகிறார்கள். தங்கள் பெயரைக் கூட பாரதியின் பெயரோடு தொடர்பு படுத்தி அமைத்துக்கொள்வதில் இவர்களுக்கு தனியான ஒரு விருப்பம் இருக்கிறது.

பொதுவாக வாழ்க்கையில் இது இயற்கை. சிறந்த வாழ்க்கை வேண்டுமென்று விரும்புவோர் ஏதேனும் ஓர் லக்ஷ்யத்தையோ, லக்ஷ்ய புருஷன் என்று தாங்கள் கருதிய ஒருவனையோ பின்பற்றித் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்வார்கள். பாரதியார், நாட்டுப்பற்று மொழிப்பற்று என்ற வெறியாலும், நிலைகெட்ட இந்த நாட்டு மக்கள் வாழ்க்கையை எண்ணி யெழுந்த உள்ளக் குமுறலாலும், தமிழ் மக்களுடைய உணர்ச்சியைத் தட்டி யெழுப்பினார். உணர்ச்சி பெற்றெழுந்த மக்கள் அவருடைய சொல்லையும் துன்பம் நிறைந்த அவருடைய வாழ்க்கையின் பண்பையும் தங்கள் லக்ஷ்யமாகக் கொண்டதில் வியப்பில்லை.

அரசியலிலே அடிமைத்தனம் நீங்கவேண்டும் என்ற புதிய விழிப்பும், சுதந்திரம் வேண்டும் என்ற தணிக்க முடியாத வேட்கையும் இன்றைய தேசிய வாழ்வின் உயிர் நாடி. இந்த உயிர் நாடியின் துடிப்பைப் பிரதிபலிப்பனவா யுள்ளன, பாரதியின் பாடலும் வசனமும். எனவே, அவற் றில் நம் மக்களுக்கு இன்றுள்ள ஈடுபாட்டுக்கு எல்லையே இல்லை. 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்றும், 'பாடிய வாய் தேனூறும் பாரதியார் பாடல்' என்றும் சொல்வதில் எவ்வளவோ பொருளிருக்கிறது. மக்கள் உள் ளத்திலெழும் வேட்கையைச் சிறந்த உருவம் கொடுத்து வெளியிடுகிறான் கவிஞன். தாங்கள் மனத்துக்குள் எண்ணி எண்ணிச் சொல்ல முடியாமல் குமுறிக் கொண்டிருந்த வற்றை யெல்லாம் கவிஞன் மிகவும் சுவையும் வேகமும் பொருந்தக் கவியில் அமைத்து வெளியிடும்போது, மக்கள் அதனிடத்து அளவின்றி ஈடுபடுவது இயற்கை.

இந்த ஈடுபாட்டின் பயனாக, நாம் பாரதி நாமத்தை இன்று மனமாரப் போற்றுகிறோம். இந்தப் போற்றுதலே வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகும். வீரனையும் கவிஞனையும் போற்றி வழிபடாத ஒரு சமுதாயத்தில் செம்மையான வளர்ச்சி யிருக்க முடியாது. பாரதியை முன்னமே சரியாகப் போற்றாவிட்டாலும்கூட, இப்போது சரியாக உணர்ந்து போற்றுகிறோம் என்பது, நமது சமுதாயம் செம்மையான நெறியில் வளர்ச்சி பெறுகிறது என்பதைக் காட்டுகிறது. எனினும், போற்றுதலுக்கும் வழிபாட்டுக்கும் ஊடே ஒரு தூற்றுதலும் இடம்பெற்று வருகிறது. இது சிறிதும் பொருத்த மன்று, விரும்பத்தக்கது மன்று.

பெண்ணுரிமை, பெண் கல்வி, பெண்ணுக்கு விடுதலை என்ற கருத்துக்கள் ஓங்கி வருகின்ற இந்நாளில், 'எட்டை

யும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்த வர் மாய்ந்து விட்டார், வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போ மென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்ற பாரதியாரின் கருத்துக்கள் எவ்வளவோ ஊக்கமளிப் பனவாயிருக்கின்றன. இத்தகைய நோக்குடன் பண்டை யிலக்கியத்தை ஆராய்வோர் கூற்றுக்கள் பலவித மாயிருக் கின்றன.

'உண்மையான காதல் தத்துவமானது சங்க நூல்களில் அமைந்திருக்கிறது. பின்னர் வந்த தமிழிலக்கியத்தில் உண் மைக் காதலுக்கு இடமில்லாமல் பொய்யும் வழுவும் புகுந்து விட்டன. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் சென்று, பாரதியார் பாடல்களில்தான் உண்மையான காதல் தத்துவம் மீண்டும் தலைகாட்டுகிறது' என்பது ஒரு சாரார் கூற்று. இது உண்மைக்குப் புறம்பானது என்பதை அதிகம் விவரிக்க வேண்டியதில்லை. ஆழ்வார் பாடல்கள், நாயன்மார் பாடல்கள், கம்ப ராமாயணம் என்பவற்றில் தோய்ந்தெழுந்தவர் பாரதியார். பரம்பொருளை வழிபடு முகத்தால் அடியவர்கள் கூறும் காதல் தத்துவமானது, அடியவரும் இலக்கியரசிகரும் தெவிட்டாது நுகர்ந்து இன் புற்றுவருவதொன்று. வால்மீகருடைய காவியத்தில் தமிழர் தம் காதல் தத்துவத்தைப் பெய்து கம்பர் வகுத்துத் தந்த கதையின் சுவை தமிழ்நாடு நன்றாய் அறிந்தது. எனவே, சங்கநூலுக்கும் பாரதிபாடலுக்கும் இடைப்பட்ட காலத் தில் காதல் சிறப்புப் பெறவில்லை என்பாரது கூற்று மெய் யானதன்று.

'கம்பருக்குப்பின் தமிழலக்கியம் வறண்டுபோன பாலை வனமாயிருக்கிறது. இடையிடையே சில பசும் புற்றரை கள் காணப்படலாம். மற்றப்படி, பாரதிவரையில் எல்லாம்

ஓரே பாலைவனந் தான். மற்றப்படி பாரதி ஒருவரே கோபு ரம் போலிருக்கிறார்' என்பது மற்றொருவகையான கூற்று. பாரதியாரைப் புகழ்வதற்காகவோ, கம்பரைப் புகழ்வதற்கா கவோ, இவ்விதம் கூறுவது பொருத்த மாகாது. இன்றைய அரசியல நிலைமையில் மக்களுள்ளத்தில் கொதித்தெழுந்த சுதந்திரக் கனலின் வெப்பமிக்க பொறியே பாரதியாவார். நாட்டின் நிலைமை எப்போதும் ஓரே மாதிரியிருந்ததில்லை, இருப்பது மில்லை. காலத்துக்கேற்பக் கவிஞனும் தோன்று கிறான்; மாறுகிறான். கம்பராமாயணம் போன்ற காவியம் பாரதியார் செய்யவில்லையே என்று இவரை நாம் குறை கூறுவதில்லை. சிறந்த கவிஞர், நம் காலத்தவர் என்ற கார ணங்கள் பற்றி இவரை நாம் ஏற்கிறோம், கொண்டாடு கிறோம். காலந்தோறும் இவர்போலவே கவிஞர் தோன்றி யிருக்கிறார்கள். சாமானியப் புலவர்களுமிருந்திருக்கிறார் கள், பெருங் கவிஞர்களு மிருந்திருக்கிறார்கள். இவர்கள் பரம்பரையில் வந்த பெருங் கவிஞரே பாரதியார். இவரைப் புகழும்பொருட்டு மற்றவர்களை இகழ்வதோ, வேறெவரும் இல்லையென்று சொல்வதோ, அவசியமில்லை.

இந்த நிலைமையில், பொதுவாய் வழங்கும் மற்றோர் அபிப்பிராயமே இங்குக் கவனிக்கத் தகுந்தது. புத்தக உற் பத்தி பெருகியுள்ள இக்காலத்தைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என்று கூறுகிறார்கள். உண்மையான மறுமலர்ச்சி பெரிதும் விரும்பத் தக்கது, வரவேற்க வேண்டுவது. இன் றைய தமிழிலக்கிய மறுமலர்ச்சியின் சிறப்பான அம்சம் சிறு கதை இலக்கியம் என்று சொல்கிறார்கள். பண்பட்ட உள்ளமானது, ஆழ்ந்த அனுபவத்தின் மேல், தான் பெற்ற இன்பத்தையோ வேதனையையோ, எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய முறையில் எடுத்துச் சொல்லும்போது,

அவ்வனுபவத்துக்கு அடிப்படையாயுள்ள உண்மைத் தத்து வமானது, வேதனையைக்கூட இன்பமாக மாற்றிப் படிப் போருக்குப் பேரிலக்கியமாக்கிவிடுகிறது. அனுபவத்தின் மூலம், என்றும் குன்றாத உண்மைத் தத்துவமானது அழகுபட வெளிபட்டு விளங்குமாயின், அவ்வெளியீடு எதுவாயிருந்தால் தானென்ன? கவிதையாயினும், காவிய மாயினும், கட்டுரையாயினும், கதையாயினும் ஒன்றுதான்; சிறு கதையும் பேரிலக்கியம் ஆகத்தான் ஆகிறது.

ஆனால், இலக்கியம் என்று சொல்லிவிட்டால் மட்டும் பயனில்லை. இலக்கியம் என்பது, உயர்ந்த ஒன்றுக்குப் பெயரெழுதித் தொங்கவிடுவ தன்று. கம்பராமாயணமும் ஆழ்வார் நாயன்மார் பாடல்களும், அருணகிரிநாதர் பாட லும், பாஞ்சோதியார் பாடலும், தாயுமானவர் இராமலிங் கர் பாடல்களும், இலக்கியம் என்று மற்றொருவர் சீட்டு எழுதி ஒட்ட வேண்டியதில்லை. மக்கள் உள்ளத்தில் இவற் றின்பால் ஏற்பட்டுள்ள கவர்ச்சியே இவை பேரிலக்கியம் என்பதற்குச் சான்று, அத்தாட்சிப் பத்திரம். இவ்விதமே, பாரதி பாடலும், இலக்கியமென்கிறோம்—மக்களுக்கு அதன்பாலுள்ள ஈடுபாடுபற்றி.

'இது போலவே, சிறுகதையெல்லாம் இலக்கியம் என்று சொல்லலாமல்லவா!' என்பது கேள்வி. எண்ணற்ற பேர் இன்று கதையெழுதுவதைத் தொழிலாகக் கொண் டிருக்கிறார்கள். ஆகவே, கதையெல்லாம் இலக்கியந்தான் என்று சொல்லி விட்டால், எல்லோருக்கும் மகிழ்ச்சி தான்.

இருந்த போதிலும், உண்மையையும் சிறிது கவனிக்க வேண்டும்; பாட்டெழுதியவர்கள் யாவரும் புலமைமிக்க

கவிராயர்களாயிருந்திருக்கலாம்; எல்லோரையும் அருங்கவி ஞர் என்று நாம் ஒப்புக்கொள்வதில்லை. ஆயிரம் கவிராயருள் ஒருவரே கவிஞராயிருப்பது அனுபவத்தில் காண்கிறோம். காரிகை கற்றுப் பாடிய தெலலாம் கவிதையாவதில்லை; எது கை மோனை, சீர் தளை பிழையாத வெறுஞ் செய்யுளாகத் தான் இருக்கும் வரப்பிரசாதத்தினால் தான் கவிஞன் பிறக்கிறான், பாடுகிறான், இலக்கியம் பிறக்கிறது, இவ் வுண்மை எல்லோரும் அறிந்து ஒப்புக்கொள்வதால், இதை விரித்துப் பேசவது அவசியமில்லை.

இன்றைய எழுத்துலகத்துக்கும் இவ்வுண்மை பொருந் தும். பேனுபிடித்தவர்களெல்லோரும் இன்று எழுத்தாளர். இதில் தவறு ஒன்றும் இல்லை. இதுவே ஓரளவுக்கு வளர்ச் சிக்கான அறிகுறி. விஞ்ஞானிகள் பல்லாயிரக்கணக்கான சோதனைகள் நடத்துகிறார்கள். இவற்றுள் பெரும் பகுதி பயனற்றுப் போகிறது. அபூர்வமாய்ப் பதினயிரத்தில் ஒரு தடவைதான் பேருண்மையொன்று புலப்படுகிறது. இதே விதமாகத்தான் எழுத்துலகத்திலும், பல்லாயிரம் பேர் பல வேறு துறைகளில் உழைத்து எழுதி எழுதித் தள்ளுவதன் விளைவாய் முடிவில் பேரிலக்கிய மொன்று உருவடைகிறது. இலக்கியகர்த்தா தனது உள்ளொளியின் துணையால் அவ் விலக்கியத்தைச் சமைக்கிறான். ஆனால் அவனைச் சமூகமே தோற்றுவித்தது என்பதை மறந்து விடக்கூடாது.

எனவே, எழுத்தாளர் பல்லாயிரர் இருக்கலாம். இவர்களுள் இலக்கிய கர்த்தா ஒருவனே தோன்றுகிறான். எழுத்தாளர், காரிகை கற்றுக் கவி பாடுபவன்போல, பல கருவிகளைச் சேகரித்துக்கொண்டு, முயன்று எழுதுகிறார் கள்; வேறு பயன் கருதி எழுதுகிறார்கள். இலக்கிய கர்த்

தாவோ, தன் உள்ளொளியால், தன் ஆனந்தத்தையோ வேதனையையோ அடக்க முடியாமல் வெளியிடுகிறான்; அவ் வெளியீடே இலக்கியமாகிறது. இவ்விதம், இருவகையான எழுத்துக்கும் அடிப்படையில் வேற்றுமை இருக்கிறது. ஒன்று முயன்று எழுதுவது; மற்றொன்று, முயற்சி யின்றித் தானே உண்டாவது. இவ்விரண்டும், பாட்டு, கதை முதலான எவ்வகையான எழுத்தாயுமிருக்கலாம். பின் னதுதான் இலக்கியம், முன்னது இலக்கிய மன்று.

எழுதுவோர் இந்த வேற்றுமையை உணர்ந்திருத்தல் எவ்வளவோ நல்லது. எழுதுவதற்கு இன்றுள்ள காரணங் கள் பல. ஒவ்வொருவரும் தாம் எழுதியது இலக்கியம் என்று எண்ணிக் கொள்வது வீண் மயக்கமேயாகும். பாரதியார் தம்முள்ளத்தின் கொந்தளிப்பை யெல்லாம் கவிதைமாரியாகப் பொழிந்தார் என்றால், எல்லோரும் கவிதைமாரி பொழிந்துவிட முடியாது. பாரதியார் பாடல் உயர்ந்த கவிதையாயிருக்க, ஏனையோர் பாடல் வெறும் செய்யுளாய் நின்றுவிடுகிறது. உயர்ந்த கவிதையானது, என் றும்பேரிலக்கியமாய் விளங்கி, மக்களுள்ளத்தைக் களிப்பிக் கிறது. செய்யுளுக்கு இந்த ஆற்றலில்லை. வசனத்திலும் இதுபோலவே முயன்று எழுதும் கதை முதலியன யாவும் இலக்கியமாகாமையால், பயனில்லாதனவாகின்றன. ஆசிரி யனுடைய முயற்சியின்றி, தானே அவனிடமிருந்து வெளிப் படும் கதை முதலியன இலக்கியமாகின்றன. இவற்றுக்கே பயனுண்டு, வாழ்வுண்டு.

பாரதியாரைப் போற்றுபவர்கள், சிறந்த கவிஞன் ஒரு மொழியில் உதிப்பது மிகவும் அருமை என்றே கூறுகிறார் கள். பாரதி காலம் வரையில் தமிழ்நாட்டில் உண்மையான இலக்கிய கர்த்தா அபூர்வமாய்த் தான் தோன்றினார் என்

ருல், பாரதி காலத்துக்குப் பின்னும் அபூர்வந்தானே? இதே கருத்துப்படி, இன்று நூறு பேர் எழுதுகிறார்களென்றால், இவர்களில் உண்மையான இலக்கிய கர்த்தா அபூர்வந்தான். எழுதுவோர் அனைவரும் இலக்கிய கர்த்தாக்களல்லர். இலக்கியத்தின் பயன், படிப்போருக்கு இன்பமளிப்பது, வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் காட்டி இன்னும் மேலான நெறிக்கு வழி காட்டுவது, மக்கட் பண்பின் உண்மையை எடுத்துப் புலப்படுத்துவதன் மூலம், வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவது. இன்று நம்மிடையே இலக்கிய கர்த்தாக்கள் மலிந்திருக்கிறார்கள் என்று சொல்லக்கூடுமானால், இவர்கள் எழுத்தின் பயனாய், மக்கள் வாழ்வும், ஒழுக்கமும், லக்ஷ்யமும் எவ்வளவோ மேலாயிருக்க வேண்டும், எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்க வேண்டும். ஆனால், பாரதியார் ஒருவருக்குப் பின், மக்கள் வாழ்க்கையையும் எண்ணங்களையும் எவ்விதமாகவும் பாதித்த இலக்கியம் எதுவும் தோன்றியதாகத் தெரியவில்லை. தோன்றி யிருந்தால் அதன் பிரதிபலிப்பைச் சமூக வாழ்வில் உணரவியலுமல்லவா? எனவே, இத்தகைய இலக்கியம் தோன்றாமையால், இலக்கிய கர்த்தாக்களும் இல்லை என்பது தெளிவு.

ஆயிரம் பேரில் ஒருவரே இலக்கிய கர்த்தாவாக இருக்கக்கூடுமாதலால், எழுதுவோர் இது பற்றிப் பெரிதும் அதைரியமடைய வேண்டுவதில்லை. இவர்களுடைய எழுத்தாகிய சேவையும் உண்மையாகவே பயன் பட முடியும். 'நாமெல்லோரும் இலக்கிய மன்னர் என்ற மயக்கம் இவர்களுக்கு இல்லாதிருந்து, பயனுள்ள காரியம் செய்யலாம் என்ற துணிவு இவர்களுக்குப் பிறக்குமானால், இவர்களுடைய எழுத்து தமிழ் நாட்டுக்கு அளவற்ற பயனைத் தந்து

எவ்வளவோ முன்னேற்றத்துக்கு இடமாயிருக்கும். சமீப காலத்தில் கதை எழுதுவோர் தொகை பெருகிவிட்டது; கதைப் புத்தகங்களும் பத்திரிகைகளும் அளவில்லாமல் பெருகி விட்டன. இவை அதிகமாகவும் விற்பனையாகின்றன வென்று சொல்லுகிறார்கள். விற்பனையை வைத்துப் பயனை மதிப்பிட முடியாது. கதைகளே படிக்கும்படி மக்களைப் பழக்கி, கதைப் புத்தகங்களையே மக்கள் விரும்புகிறார்கள் என்று சொல்லி, அவற்றையே பெருக்கிக் பெருக்கிக் கொண்டு போவது சேவையாகாது. உலகம் போகிற போக்கில் தானும் போகிறவன் அறிவுடையவனாகான். சரியான வழியில் சிந்தித்துத் திட்டம் வகுத்துத் தன் திட்டப்படி உலகைச் செலுத்த வல்லவனே அறிவுடையவன் உலகத் தோடு ஒட்ட ஒழுகுதல் ஒருவனுக்கு வெற்றித்தரக் கூடும். ஆனால் அது சேவையாகாது, பயனுடையதுமாகாது. தன் வழி உலகைத் திருப்ப வல்லவனே மக்கட் குலத்துக்குச் சேவை செய்பவன்; திருப்பமுடியாவிட்டாலும், திருப்ப முயலவாவது வேண்டும்.

ஆதலால், மக்கள் கதைகளையும் வீண் பொழுது போக்கையுமே விரும்புகிறார்கள் என்று கருதி இதற்காவன செய்வது இலக்கியமாகாது, இலக்கிய சேவையோ அன்றி நாட்டின் சேவையோ ஆகவும் ஆகாது. தமிழ் நாட்டில் பிறந்தவனுக்குப் பொழுது போக்க நேரமேது? பொழுது போக்குவது என்றால் ஆணாயினும் பெண்ணாயினும், சோம் பேறித்தனமாய்க் காலங் கடத்துவதைத் தவிர வேறொன்று மில்லை. செய்கிற வேலையில் போதிய ஈடுபாடு இல்லாமை யால் தான், சோர்வோ, பொழுது போக்க வேண்டும் என்ற எண்ணமோ எழுகிறது. வேலையில் சோர்வு ஏற்படுங் காலத்து, பிடித்தமான மற்றொரு வேலை செய்யத் தக்க

முறையில் வாழ்க்கையை மக்கள் அமைத்துக்கொள்வார்களானால், சோர்வு அல்லது பொழுதுபோக்கு என்ற பேச்சுக்கே இடமிராது. ஆகவே, பொழுதுபோக்கு என்ற பரம கருணை நோக்கத்தோடு கதைப் புத்தகம் எழுதுவது, இன்றியமையாத ஒரு காரியமுமன்று, சேவையுமன்று.

இன்று எழுத்து வேலையில் ஈடுபட்டுள்ள நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களும் இவற்றைச் சற்று சிந்தித்துப் பொழுது போக்குவதற்காகக் கதை எழுதுவதை நிறுத்திக் கொள்வது நல்லது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் கொணர்தல் வேண்டும் என்ற பாரதியாரின் ஆசையை இவர்கள் நிறைவேற்ற முயல்வார்களானால், தமிழகத்துக்கு எவ்வளவோ பயனுண்டு; எல்லோரும் பெருங் கலைஞர்களாகாவிட்டாலும், பெரும் பயன் தரும் காரியம் செய்தோம் என்று களிப்படைய வழியுண்டு. அறிவியற்கலைகள் இன்று ஆங்கில மொழியில் அளவில்லாமல் பரந்து கிடக்கின்றன. நூற்றுக்கணக்கான எழுத்தாளர் நூறுவருஷம் முயன்று அவற்றைத் தமிழ் மொழியில் கொணர்ந்தாலும், வேலை முடிந்து விடாது. எனவே, கதை எழுதுவோர் இவ்வேலையை விட்டுவிட்டு, அறிவியற்கலை நூல்களைப் படித்துணர்ந்து, பாமர மக்கள் புரியும் வண்ணம் தமிழில் தெளிவாக எழுத முற்படுதல் வேண்டும். ஆங்கிலமொழியில் எந்த அறிவியற்கலை பற்றியும் எளிய அரிய நூல்கள் அளவிளந்தனவுள்ளன. அவற்றைப் பயில்வதும் எளிது. ஆங்கிலம் அறியாத நம்மவரும் அறியும்படி அந்நூற் கருத்துக்களைத் தமிழில் வெளியிடுவது, எழுத்தாளர் இன்று செய்யக்கூடிய வேலைகளில் மிகவும் சிறந்ததாகும். வெறும் கதைகளை எழுதி ஏழைத் தமிழன் வீண் பொழுது போக்கும்படி செய்ய இவர்கள் முயல்வதைவிட, அறிவியல்

# பொல்லாத உலகம்! —சிற்றில் பேச்சு

"பாமரன்"

பஞ்சம்; கள்ள மார்க்கெட்; கொள்ளை லாபம். இன்றைய அரசியல் உலகிலும், பத்திரிகை உலகிலும், நடமாடும் சொற்களிவை. இன்றுமட்டுமா இத்தீமைகள் நடம்புரிகின்றன? தனியுடைமை தோன்றிய காலந் தொட்டே தாண்டவமாடுகின்றன. அப்படியானால், இன்றுமட்டும் ஏன் இவ்வளவு ஆரவாரம்!

"கொள்ளை லாபத்தை - கள்ள மார்க்கெட்டை ஒழித்தே தீருவோம்" என்று அதிகாரவர்க்கம் ஆர்ப்பரிக்கின்றது: உண்மைதான். மக்களுக்குத் தேவையான பொருள்களைப் பதுக்கி வைப்பது கள்ளமார்க்கெட்; நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்பது கொள்ளை லாபம்.

அதிகார வர்க்கமே! இதுமட்டுமா கள்ளமார்க்கெட் - கொள்ளை லாபம்! இன்னுமுண்டு. ஒருவன் உணவின்றி குடும்பத்துடன்

---

நூல்கள் எழுதி, அவன் அறிவு வளர உதவுவார்களானால், தமிழகமே விரைவில் மாறிவிடும். அறிவியல் துறைகள் பற்றிய பொது அறிவு அனைவருக்கும் கிடைக்குமானால், அதுவே உண்மையான தமிழர் வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்கு வித்தாகும். மக்களனைவருடைய அறிவும் வளர்வதே உண்மையான மலர்ச்சி. அருள் வசத்தால் ஆற்றலோடு பிறந்து புத்திலக்கியம் சிருஷ்டிப்போர் சிருஷ்டிக்கட்டும். ஏனையோர் முயன்று கதை எழுதுவதைத் தொழிலாக வைத்திருப்பதை விட்டு, முயன்று அறிவு வளர்க்க வழி தேடுவார்களானால், இது எவ்வளவு மேலான சேவையாகும்! இத்தகைய போக்கு தமிழுலகில் இனியேனும் வருமாக. புதுமைத் தமிழின் லக்ஷ்யம் பொழுதுபோக்கு என்ற அபிப்பிராயம் ஒழிந்து, அறிவு வளர்ச்சி என்ற அபிப்பிராயம் உதிக்குமாக.

குமுறி அழ, இன்னொருவன் ஐந்து தலைமுறைக்கும் வருகின்ற அளவுக்குப் பொருளைச் சேமித்து வாழ்கின்றானே, அது கள்ளச் சிந்தையல்லவா?

ஏழைத் தொழிலாளி உடலுருக உழைத்தபின் உழைப்புக் கேற்ற ஊதியம் தராமல், அவனது உழைப்பைக் கவர்ந்து வாழும் முதலாளி - ஜமீந்தார் அடைவது கொள்ளை லாபமல்லவா?

இந்தக் கள்ளச் சிந்தையும், கொள்ளைச் சந்தையும் மட்டும், சட்டச் சம்மதம் - தெய்வத்தின் திருவருள் போலும்!

பாட்டாளி - பஞ்சமன் - பாடுபட்டும் உணவின்றி, உடையின்றித் தலைமுறை தலைமுறையாக உள்ளங் குமுறிய போதெல்லாம், அவனை வாழ வைக்க சர்க்காரிடமிருந்து சட்டம் புறப்படவில்லை. தனியுடைமையாளரின் தயவு தோன்றவில்லை; கட்சிகளுக்கும் கருணை பிறக்கவில்லை. ஏழை துன்புற்றால், அது அவன் தலைவிதி; முன் ஜென்ம பாவம்; தெய்வத்தின் கோபம். பாட்டாளி மகன் பண்டம் வாங்கப் பணமில்லாமல் பசித்திருந்த போது - பருத்தி ஆடைக்குப் பரிதவித்தபோது, பார்த்திருந்த உலகம், இன்று படித்தவனுக்குப் பாலன்னமில்லை யென்றால் - பணக்காரனுக்குப் பட்டாடை இல்லை யென்றால், பஞ்சமெனக் கூறி பரிவு காட்டுகிறது.

உண்மையென்ன? அறிவை முதலாகக் கொண்டவன் அரசாங்கத்தை நடத்துகின்றான்; பொருளை முதலாகக் கொண்டவன் பொது மக்களின் தலைவனாக விளங்குகின்றான். இவ்வளவு நாள் பாமரனை வாட்டிய பஞ்சம், படிப்பாளியையும், பணக்காரனையும் பதம் பார்க்கத் துணிந்துவிட்டது. ஆகவே தான், 'தலை விதி' தன் முயற்சியாக மாறிவிட்டது. பாவம் "பஞ்ச மென"ப் பெயர் கொண்டுவிட்டது! பொல்லாத உலகம்!

இனியேனும், 'தலை விதி' மாய்ந்து தன் முயற்சி வாழுமா? படித்தவன - பணக்காரன் பஞ்சத்தோடு, பாமரனின் வறுமையும் தொலையுமா?

---

Printed at the Adal Padal Press, 82, Wallajah Road, Mount Road, Madras—Paper Issue Card No. M.S. No. 486, 1500 Copies—6-1946.

# வீரக் கண்ணகி

ஆக்கியோன் ம. பொ. சிவஞான கிராமணி

❋

சிலப்பதிகாரத்தை அரசியல்
நோக்குடன் ஆராய்ந்து
எழுதப்பட்ட ஓர் அரியநூல்

❋

கண்ணகியின் புரட்சி, பாண்டியன்
நெடுஞ் செழியன் செங்கோன்மை,
பழந்தமிழ் மக்களின் அரசியல்
நெறி ஆகியவைகள் விரிவாக
ஆராயப்பட்டுள்ளன

❋

விரைவில் வெளிவரும்

❋


தமிழ் முரசு பதிப்பகம்,
233, லிங்கி செட்டி தெரு,
சென்னை 1.

## விரைவில் வெளிவரும்

# நிலைபெற்ற சிலை

(சிறு காவியம்)

ஆக்கியோன் :

## குயிலன்

பதிப்பாசிரியர் : "தென்றல்"

— விவரங்களுக்கு —

## தமிழ் முரசு பதிப்பகம்

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை 1.

Cover page printed at the Mercantile Press, Mannady, Madras.